**நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டம் - 2017**

---

நிலைபேறான மின்வலுத் துறை உதவிச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 2734 - எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) மற்றும் 4.03(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் பகுதி 06 வரையான பகுதிகளினதும் 09 மற்றும் 10 வரையான பகுதிகளினதும் அமுலாக்கல் முகவராக காணப்படுகின்ற அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதிகள் 07 மற்றும் பகுதி 08 இனை அமுல்படுத்தும் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 01 தொடக்கம் பகுதி 06 மற்றும் பகுதி 09 மற்றும் 10 இன் கீழ் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீது எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றது. நம்பகரமான, போதியளவான மற்றும் வசதியான மின்வலு வழங்கலின் இடப்பரப்பை விஸ்தரித்தல் மற்றும் (அ) கிழக்கு, வட மத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மின்பரிமாற்றல் முறைமையினை பலப்படுத்துதல் (ஆ) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பின்தங்கிய கிராமங்களிற்கு மின்சாரம் வழங்குதல் (இ) எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மேலும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக சேவை வழங்கலின் வினைத்திறனையும் நம்பகத்தன்மையினையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 18,135.45 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 162.03 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் ரூபா 13,428.09 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 120.00 மில்லியனுக்குச் சமமான அல்லது 74 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்புச் செய்யப்படவேண்டுமென்ற இணக்கப்பாடும் மீதி ரூபா 4,707.36 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 42.03 மில்லியன் அல்லது 26 சதவீதம் இலங்கை அரசினால் வழங்கப்பட வேண்டுமெனவும் இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2011 நவம்பர் 17 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, 2016 ஒக்தோபர் 30 வரையிலும் செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் இலங்கை அரசினால் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளினைப் பயன்படுத்தி 2017 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது

கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 03 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 2018 யூலை 31 இல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,567.22 மில்லியன் கிரயமொன்றில் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதி மற்றும் ரூபா 489.39 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் முறையே அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 210.73 மில்லியன் மற்றும் ரூபா 113.07 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு மற்றும் தொடர்புடைய சொத்துக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமுல்ப்படுத்தல் முகவர்க்கு மாற்றஞ்செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் ரூபா 10,256.70 மில்லியன் பெறுமதியில் பூர்த்தியாக்கப்பட்டு 2015 இல் அமுல்ப்படுத்தல் முகவர்க்கு கையளிக்கப்பட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கீழ் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கடனளிக்கும் முகவரினால் நேரடியாக ஒப்பந்ததாரரொருவருக்கு 2015 நவம்பர் 26 இல் ரூபா 2.45 மில்லியன் தொகையான முற்பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அவற்றின் மீதான பேரேட்டுக் கணக்குகளில் எவ்வித சரிப்படுத்தல் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதன் விளைவொன்றாக, கடன் வருமானம் சமமான தொகையினால் மிகைத்துக்குறிக்கப்பட்டிருந்தது.

(இ) நடைமுறையொன்றாக, மூலதன பணிகளுக்கு அவற்றிக்கு ஏற்பட்ட உண்மைக் கிரயவியல் முறைமையினைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக ஊழியம், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களினை பெறுமதியிடுவதற்கு செயற்திட்டம் நியமக் கிரயவியல் முறைமையினை பிரயோகித்தது. அதன் விளைவொன்றாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி ரூபா 231.04 மில்லியனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இனக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 11,249.02 மில்லியன் தொகையான கடன் வருமானம் வெளிவாரி வளங்கல் திணைக்களத்தினால் பேணப்பட்ட அறிக்கைகளில் காட்டப்பட்ட ரூபா 11,443.39 தொடர்புடைய மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாட்டுடன் தொடர்புடைய முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 120.00 | 13,428.09 | - | 1.24 | 187.35 | 87.66 | 12,343.85 |
| ஜீஓஎஸ்எல் | 42.03 | 4,707.36 | - | - | - | - | - |
| சீஈபி | - | - | 150.00 | 1.78 | 269.96 | 15.39 | 2,333.02 |
| **மொத்தம்** | **162.03** | **18,135.45** | **150.00** | **3.02** | **457.31** | **103.05** | **14,676.87** |

செயற்திட்டத்தினால் அளிக்கப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களின் விலைகள் அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட பொறியியலாளர்களின் மதிப்பீடுகளினை விடக் குறைவாக காணப்படுகின்றதென 2016 யூலை 18 இன் பிஈ/ரீஈஎன்/எஸ்சீஏபிசீ/எஸ்ஜீ/2015/41 ஆம் இலக்க அவரின் கடிதத்தின் மூலம் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டப்பட்டிருந்தார். மேற்குறித்த நிலைமை காரணமாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,652.73 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 30.41 மில்லியன் ஒதுக்கீடு தொடர்ந்தும் காணப்பட்டமை அவற்றின்மீது நடாத்தப்பட்ட கணக்காய்வு புலனாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்ககூடிய தகவல்களின் பிரகாரம், புதிய காலி மின்வலு மின்பரிமாற்றல், வட கிழக்கு மின்வலு மின்பரிமாற்றல், ஊவா மாகாணத்திலுள்ள கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமை, மொனராகல நீர் மின்வலு நிலையத்தின் விபரமான பொறியியல் வடிவமைப்பொன்றின் எதிர்வினை மின்வலு முகாமைத்துவம் மற்றும் தயாரிப்பினுடைய அபிவிருத்திகளின் கீழான வேலைகள் முன்னைய ஆண்டுகளில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கிரிபத்கும்புற, மின்சார விநியோக செயற்திட்டத்தினை பெருப்பித்தலின் கீழான வேலைகள், ஊவா மாகாண மற்றும் அம்பாறையில் கிராமிய மின்மயமாக்கல் மற்றும் விநியோக முறைமையினை முன்னேற்றும் செயற்திட்டத்தின் விரிவாக்கலுக்கான மூலப்பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல்முன்னேற்றத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளை அந்தத் திகதியில் உள்ளவாறு, 02 மின்பரிமாற்றல் வரிசைகளின் மீள்நிர்மாணிப்பிற்கான மூலப்பொருட்களின் பெறுகைகள் மீதான செயற்பாடுகள் பூர்த்தியடைந்து காணப்பட்டது.

## 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை அமுல்ப்படுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிப்பு முகவரினால் ரூபா 17.96 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 08 பகுதிகளினை உள்ளடக்கிய செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் செயற்திட்டத்தின் அவ்வாறான பகுதிகளினுடைய செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு, இலங்கை மின்சார சபையினால் கையாளப்படுகின்ற அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மேற்பார்வைக்கு பொறுப்பாகக் காணப்படுகின்ற மேலதிக பொது முகாமையாளர்களுக்கு (செயற்திட்டங்கள்) பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரிவு தலைவர்களின் வரம்பின் கீழ் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

(இ) கிராமிய மின்மயமாக்கல் செயற்திட்டத்திற்கு ரூபா 919.6 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவுசெய்யப்பட்ட மூலப்பொருட்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிராது தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், 2016 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் பூர்த்தியடைந்து காணப்பட்ட போதிலும் ரூபா 211.3 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவுசெய்யப்பட்ட இருப்பு வகைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழிச்சரக்கொன்றாக தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், அம்பாறை மாவட்டம் மற்றும் ஊவா மாகாணத்தின் கிராமிய மின்மயமாக்கல் செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்கு ரூபா 533.49 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவுசெய்யப்பட்ட மூலப்பொருட்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய மாகாணங்களிலுள்ள உபஅலுவலகங்களின் பயன்பாட்டிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.